**ஜூலை – 07**

# TNPSC துளிகள்

- ஸ்லைஸ் எனும் நிதி தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனமானது, ஸ்லைஸ் UPI கடன் அட்டை மற்றும் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் செயலியில் இயங்கும் இந்தியாவின் முதல் நேரடி வங்கி கிளை மற்றும் ATM எந்திரத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- முன்னாள் பிரதமரின் மரபினை கௌரவிக்கும் வகையில் பெங்களூரு நகரப் பல்கலைக் கழகத்தினை டாக்டர் மன்மோகன் சிங் நகரப் பல்கலைக்கழகம் என மறுபெயரிடுவதற்கு கர்நாடக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- டெல்லியில் உள்ள தேசியப் பொதுக் கூட்டுறவு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு நிறுவனம் (NIPCCD) ஆனது, சாவித்ரிபாய் புலே தேசிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு நிறுவனம் என மறுபெயரிடப் பட்டுள்ளது.
- போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் (NCB) ஆனது, MED MAX என்ற நடவடிக்கையின் கீழ், ஆசியா, வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஓசியானியா ஆகிய சுமார் 10க்கும் மேற்பட்ட நாடுகளில் இயங்கும் ஒரு போதைப் பொருள் அமைப்பினை அகற்றியது.
- ஜியோ நிறுவனமானது, மொத்த சந்தாதாரர்களின் எண்ணிக்கையில் அமெரிக்காவில் உள்ள T-Mobile எனும் தொலைத்தொடர்பு நிறுவனத்தினை முந்தியதன் மூலம், சந்தா தாரர்களின் எண்ணிக்கையில் உலகின் மிகப்பெரிய ஒரு நிலையான கம்பி வடம் சாராத இணைப்பு அணுகல் (FWA) வழங்குநராக மாறியுள்ளது.
- அமெரிக்காவுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை ஆதரிப்பதற்காக, 2025 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதியன்று தொடங்கவிருந்த அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான 3% எண்ணிம சேவை வரியை கனடா திரும்பப் பெற்றது.
- கல்லூரி ஆசிரியர்களுக்கான வரைவு மாதிரி நடத்தை விதிகளை தமிழ்நாடு உயர்கல்வித் துறை வெளியிட்டுள்ளது.
  - இது கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் சமூக ஊடகங்களில் ஒளிப்படங்கள் மற்றும் இடுகைகளை உள்ளிடுவது குறித்து ஆசிரியர்களுக்கான சில குறிப்பிட்ட வழி காட்டுதல்களை உருவாக்க உதவும்.
- இந்திய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களைச் சேர்ந்த (UT) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு (ULB) தலைவர்களின் முதல் தேசிய மாநாடு என்பது அரியானாவின் குருகிராமின் மானேசரில் நடைபெற்றது.
  - இந்திய ஜனநாயக அமைப்பில் ULB அமைப்புகளின் பங்கினை வலுப்படுத்துவதையும் உள்ளாட்சி நிர்வாகத்தில் அவற்றின் முக்கியப் பங்கை ஆதரிப்பதையும் இந்த நிகழ்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "குடும்ப தத்தெடுப்பு திட்டத்தின்" கீழ் காசநோய் (TB) பரிசோதனையை உள்ளடக்கிய முதல் பிரதேசமாக புதுச்சேரி மாறியுள்ளது.
  - இந்த முன்னெடுப்பின் கீழ், மருத்துவ மாணவர்கள் வழக்கமான சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக்காக என குடும்பங்களைத் தத்தெடுத்து அவர்களின் மருத்துவ நடவடிக்கைகளை கண்காணிக்கின்றனர்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கோயம்புத்தூர் மாவட்டத்திற்கான விரிவான செயல் திட்டம் 2041

- தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கான விரிவான செயல் திட்டம் 2041 என்ற திட்டத்தினை அறிவித்தார்.
- இந்தத் திட்டமானது புவியிடஞ்சார்ந்த தகவல் அமைப்பு (GIS) என்ற தொழில்நுட்பத்தை

அடிப்படையாகக் கொண்டது.

- இது 1,531 சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவிலான கோயம்புத்தூர் உள்ளூர் திட்டமிடல் பகுதியை உள்ளடக்கியது.
- இந்தத் திட்டமானது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையின் கீழ் உள்ள நகர மற்றும் கிராமப்புறத் திட்டமிடல் இயக்குநரகத்தால் தயாரிக்கப்பட்டது.
- இத்திருத்தப்பட்ட நில பயன்பாட்டுத் திட்டத்தில், சுமார் 33% பரப்பளவு ஆனது பசுமை மண்டலமாகக் குறிக்கப்பட்டுள்ளது.
- இதில் மீதமுள்ள நிலம் ஆனது நகர்ப்புற மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக அனுமதிக்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது, 2041 ஆம் ஆண்டிற்குள் 60 லட்சம் (6 மில்லியன்) மக்கள்தொகை வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளது.




# தேசியச் செய்திகள்

## RDI திட்டம்

- 2025 ஆம் ஆண்டு ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்க (RDI) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டத்திற்கு மொத்தம் 99,771 கோடி ரூபாய் அல்லது 11.65 பில்லியன் டாலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இது ஆராய்ச்சி மற்றும் உள்ளார்ந்தத் தொழில்நுட்பத்தில் இந்தியாவின் முதலீட்டை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 0.64% மட்டுமே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக செலவிடுகிறது.
- அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சீனா போன்ற பிற நாடுகள் மொத்த உள்நாட்டு

உற்பத்தியில் சுமார் 2% முதல் 5% வரை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக என்று செலவிடுகின்றன.

- இந்த நிதியானது 50 ஆண்டுகளுக்கு வட்டியில்லா கடனாக வழங்கப்படும்.
- அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை (ANRF) இந்த நிதியின் மேலாண்மை நடவடிக்கைகளை நிர்வகிக்கும்.
- இந்தத் திட்டத்தில் ஆராய்ச்சியை நன்கு வணிகமயமாக்குதல் மற்றும் ஆய்வக உள் கட்டமைப்பை அமைத்தல் ஆகியவை அடங்கும்.
- இந்தத் திட்டமானது அடிப்படை கருத்தாக்கங்களிலிருந்து (TRL-4) ஆராய்ச்சியை மிக முழுமையாகத் தயாராக உள்ள தொழில்நுட்பங்களாக (TRL-9) மாற்ற உதவும்.
- இதில் தொழில்நுட்பத் தயார்நிலை நிலை (TRL) ஆனது ஒரு புதியக் கண்டுபிடிப்பின் மேம்பாட்டுக் கட்டத்தை மதிப்பிடுகிறது.




## ELI திட்டம்


- 2025 ஆம் ஆண்டு வேலைவாய்ப்புடன் இணைக்கப் பட்ட ஊக்கத் தொகை (ELI) என்ற திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு 99,446 கோடி ரூபாயாகும்.
- இது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 முதல் 2027 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதி வரை அமலில் இருக்கும்.
- இரண்டு ஆண்டுகளில் 3.5 கோடி (35 மில்லியன்) வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே இதன் இலக்காகும்.
- இவற்றில், சுமார் 1.92 கோடி (19.2 மில்லியன்) வேலைவாய்ப்புகள் முதல் முறையாக வேலைவாய்ப்புகளில் இணைபவர்களுக்கு வழங்கப்படும்.
- இந்தத் திட்டமானது மிக முதல் முறையாக ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி

அமைப்பில் (EPFO) பதிவு செய்யும் ஊழியர்களுக்கு ஊக்கத்தொகையை வழங்குகிறது.

- ஊழியர்கள் ஆதார் எண்ணினைப் பயன்படுத்தி நேரடிப் பயன் பரிமாற்றம் (DBT) மூலம் தங்கள் தொகையினைப் பெறுவார்கள்.




## முதல் ஃபோட்டானிக் ரேடார்




- இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஆனது இந்தியாவில் முதல் முழுமையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஃபோட்டானிக் ரேடாரை உருவாக்கியுள்ளது.
- இந்த ரேடார் வழக்கமான ரேடியோ அலைகளுக்குப் பதிலாக லேசர்கள் மற்றும் ஃபோட்டானிக் ஒருங்கிணைந்தச் சுற்றுகள் (PICs) போன்ற ஒளி சார்ந்த கூறுகளைப் பயன்படுத்துகிறது.
- இது சுமார் 11 ஜிகாஹெர்ட்ஸ் (GHz) அலைவரிசையில் இயங்குவதால், இது ரேடாருக்குப்

புலப்படாத விமானங்கள் மற்றும் சிறிய ஆளில்லா விமானங்களைக் கண்டறிய வழி வகுக்கிறது.

- இந்த அமைப்பானது சுமார் 1.3 சென்டிமீட்டர் உயர் தெளிவுத் திறனைக் கொண்டு உள்ளதால், ஆளில்லா விமானங்களின் இறக்கைகள் போன்ற சிறிய பகுதிகளைக் கூட கண்டுபிடிக்கும் திறன் கொண்டது.
- இதன் ஒளியிழை சார்ந்த சமிக்ஞை செயலாக்கம் ஆனது மின்னணு நெரிசல் மற்றும் தவறான தகவல் பரிமாற்றம் ஆகியவற்றிக்கு இயல்பாகவே எதிர் திறனைக் கொண்டு உள்ளது.
- இந்த ரேடார் சிறியதாகவும், ஆற்றல் திறன் கொண்டதாகவும் உள்ளதால், Su-30MKI, தேஜாஸ், ரஃபேல் ஜெட் விமானங்கள், கடற்படைக் கப்பல்கள் மற்றும் சில வான்வழிப் பாதுகாப்புப் பிரிவுகள் போன்ற தளங்களுக்கு ஏற்றதாக அமைகிறது.

## POSHAN அபியான் திட்டத்தில் முக அடையாளம் காணும் வசதி




- POSHAN அபியான் (தேசிய ஊட்டச் சத்துத் திட்டம்) கீழ் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ரேஷன் பொருட்களைப் பெறுவதற்கு 2025 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் முக அடையாளம் காணுதல் வசதி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- முக அடையாளம் காணல் வசதியினைத் தவிர்ப்பதற்கான விருப்பத் தேர்வினை நீக்கப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் (MoWCD) POSHAN டிராக்கர் என்ற செயலியைப் புதுப்பித்துள்ளது.
- உயிரியல் அளவியல் பதிவுகளின் சரிபார்ப்புக்காக என புதிய பதிப்பைப் பயன்படுத்த அங்கன்வாடி பணியாளர்கள் செயலியை மீண்டும் பதிவிறக்கி நிறுவ வேண்டும்.
- ஒருங்கிணைந்தக் குழந்தை மேம்பாட்டு சேவைகளின் (ICDS) கீழ் 6 முதல் 36 மாத வயது உடைய குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு பலனளிப்பதை இந்தத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.
- உயிரியல் அளவியல் பதிவுகளின் சோதனைகளின் போது தாங்கள் தான் பதிவு செய்யப் பட்ட உண்மையான நபர்கள் என்பதை நிரூபிக்க 3 முதல் 6 வயதுடைய

குழந்தைகளும் 'liveliness detection' எனப்படுகின்ற உயிரியல் அளவியல் பதிவுகளின் மீது சோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

## இந்தியாவின் டார்க்நெட் மூலமான போதைப்பொருள் நடவடிக்கை ஒழிப்பு

- கேட்டமெலான் என்ற மிகப் பெரிய டார்க்நெட் மூலமான போதைப்பொருள் கடத்தல் குழுவைத் தடுப்பதற்காக போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியம் (NCB) மெலன் நடவடிக்கையினை நடத்தியது.
- ஐக்கியப் பேரரசிலிருந்து லைசெர்ஜிக் ஆசிட் டைஎத்திலமைடு (LSD) மற்றும் கேட்டமைன் ஆகியவற்றை வாங்கி இணைய சங்கேதப் பணங்களைப் பயன்படுத்தி இயங்கலையில் விற்கும் ஒருவரால் இந்தக் குழு வழி நடத்தப்பட்டது.
- LSD என்பது பூஞ்சையிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு மன மருட்சியினை உருவாக்கும் மருந்து ஆகும்.
- இது காட்சி சார்ந்த அனுபவங்கள், மனநிலை மாற்றங்களை ஏற்படுத்தி, மூளையின் செரோடோனின் அமைப்பை பாதிக்கிறது.
- கேட்டமைன் என்பது கனவு போன்ற மற்றும் உடலுக்கு வெளியேயான உணர்வுகளை ஏற்படுத்தும் ஒரு மயக்க மருந்தாகும்.




## இந்தியாவின் முதல் QR குறியீடு அடிப்படையிலான வீட்டு முகவரி திட்டம்


- இந்தூர் மாநகராட்சிக் கழகமானது, மத்தியப் பிரதேசத்தில் (MP) ஒரு புதிய எண்ணிமத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இதன் கீழ் விரைவுக் குறியீடுகளுடன் (QR) கூடிய பிரத்தியேக தகடுகள் ஒவ்வொரு வீட்டிற்கும் வெளியே பொருத்தப்படுகின்றன.
- மக்கள் தங்கள் கைபேசிகளில் வீட்டின் உலகளாவியப் புவியிடங்காட்டி அமைப்பு (GPS) சார்ந்த இருப்பிடத்தைக் காண QR குறியீட்டை ஸ்கேன் செய்யலாம்.
- குடிமக்கள் சொத்து மற்றும் நீர் வரிகளைச் செலுத்த அல்லது புகார்களைத் தாக்கல்

செய்ய இந்த QR அமைப்பைப் பயன்படுத்தலாம்.

- இந்தத் திட்டமானது மத்திய அரசின் Digipin (எண்ணிம அஞ்சல் குறியீட்டு எண்) என்ற அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.




## C-FLOOD தளம்




- C-FLOOD என்பது வெள்ளம் பாதித்தப் பகுதிகளின் வரைபடங்கள் மற்றும் நீர் மட்ட கணிப்புகளுடன் கிராம அளவில் வெள்ளப் பாதிப்புகள் குறித்த முன்னறிவிப்புகளை இரண்டு நாட்கள் முன்கூட்டியே வழங்கும் ஒரு வலையமைப்பு அடிப்படையிலான தளமாகும்.
- மேம்பட்டப் பேரிடர் மேலாண்மைக்காக தேசிய மற்றும் பிராந்திய நிறுவனங்களின் வெள்ள மாதிரியாக்கத் தரவை இந்த அமைப்பு ஒருங்கிணைக்கிறது.
- தற்போது, இந்த C-FLOOD தளத்தில் மகாநதி, கோதாவரி மற்றும் தபதி நதிப் படுகைகள் குறித்த தரவுகள் அடங்கும். விரைவில் மேலும் சில நதிப் படுகைகளைச் சேர்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது.
- இது தேசிய மீக்கணினித் திட்டத்தின் (NSM) கீழ் மேம்படுத்தப் பட்ட இரு பரிமாண


நீரியக்கவியல் மாதிரியாக்கம் மற்றும் அதிஉயர் செயல்திறன் கொண்ட ஒரு கணினி முறைமையை (HPC) பயன்படுத்துகிறது.

- இந்தத் தளத்தினைப் புனேவில் உள்ள மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையம் (C-DAC) மற்றும் மத்திய நீர் வள ஆணையம் (CWC) உருவாக்கியுள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## "3 by 35" முன்னெடுப்பு - WHO

- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, "3 by 35" முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளது.
- பல்வேறு சுகாதார வரிகள் மூலம் 2035 ஆம் ஆண்டிற்குள் புகையிலை, மதுபானம் மற்றும் சர்க்கரை நிறைந்த பானங்கள் மீதான உண்மையான விலைகளை குறைந்தது 50 சதவீதம் உயர்த்துமாறு உலக நாடுகளை வலியுறுத்துகிறது.
- நாள்பட்ட நோய்களைக் கட்டுப்படுத்தவும், முக்கியப் பொது வருவாயை ஈட்டவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- WHOவின் இந்தத் தரவுகளின் படி, புகையிலை, மதுபானம் மற்றும் சர்க்கரை நிறைந்த பானங்களின் நுகர்வு தொற்றாத நோய்களின் பரவலைத் தூண்டுகிறது.
- இதய நோய், புற்றுநோய் மற்றும் நீரிழிவு உள்ளிட்ட NCD நோய்கள் உலகளவில் ஏற்படும் அனைத்து உயிரிழப்புகளிலும் சுமார் 75 சதவீதத்திற்கும் மிக அதிகமாகப் பங்களிக்கின்றன.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## எதிர்கால மின்னணுவியலுக்கான ஒரு புதிய காந்தப் பொருள்

- குரோமியம் ஆன்டிமோனைடு (CrSb) எனப்படுகின்ற ஒரு காந்தப் பொருளில் ஓர் அரிய

நடத்தையை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.


- இது மாற்று காந்தவியல் (ஆல்டர்மேக்னட்கள்) எனப்படும் புதிய வகை காந்தத்தின் ஒரு பகுதியாகும்.
- இது அயக்காந்தவியல்/ஃபெரோ காந்தங்கள் மற்றும் எதிர் அயக் காந்தவியல் / ஆன்டி ஃபெரோ காந்தங்கள் ஆகிய இரண்டின் சிறந்த அம்சங்களையும் கொண்டு உள்ளது.
- S.N. போஸ் தேசிய அடிப்படை அறிவியல் மையத்தின் (SNBNCBS) ஆராய்ச்சியாளர்கள், CrSb ஆனது தற்போதையத் திசையின் ஒரு அடிப்படையில் நடத்தையை மாற்றுகிறது என்பதை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் பொருள் ஆனது ஒரு திசையில் n-வகை (எலக்ட்ரான்கள்) போலவும், மற்றொரு திசையில் p-வகை (மின் துளைகள்) போலவும் செயல்படுவதால், இது திசை சார்ந்த கடத்தல் துருவமுனைப்பை (DDCP) கொண்டுள்ளது.
- இந்த அரிய இருமையைக் கொண்டுள்ள முதல் அறியப்பட்ட மாற்றுக் காந்தம் இதுவே ஆகும்.
- இது தனித்தனி பொருட்கள் அல்லது ஒருங்கிணைப்புத் தேவையை நீக்குவதன் மூலம் சாதனங்களை எளிதாக வடிவமைக்க உதவும்.
- CrSb ஆனது சுற்றுச்சூழலுக்கு உகந்தது மற்றும் சுழல் மின்னணுவியல் போன்ற அடுத்த தலைமுறை நுட்பத்திலான மின்னணுவியலுக்கு ஏற்றதாகும்.




## உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் டெங்கு தடுப்பூசி


- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட DengiAll எனப்படும் இந்தியாவின் முதல் நாற்கரப் பிணைப்புத் திறன் கொண்ட (டெட்ராவலண்ட்) டெங்கு தடுப்பூசியானது அதன் மூன்றாம் கட்ட மருத்துவப் பரிசோதனைகளில் 50% வழங்கீட்டினை எட்டியுள்ளது.
- DengiAll மருந்தானது அமெரிக்கத் தேசிய சுகாதார நிறுவனங்களின் (NIH) உரிமத்தின் கீழ் பானாகியா பயோடெக் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.
- இந்த தடுப்பூசியானது டெங்கு வைரசின் நான்கு துணை வகைகளையும் (DEN-1, DEN-2, DEN-3, DEN-4) குறி வைத்து தாக்குகிறது.

- டெங்கு என்பது பெண் ஏடிஸ் எஜிப்தி கொசு கடிப்பதால் பரவும் ஒரு வைரஸ் நோய ஆகும்.




## இதரச் செய்திகள்

### பண்டைய எகிப்திய மரபணு




- ஆராய்ச்சியாளர்கள் 4,500 முதல் 4,800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு நபரின் உடலிலிருந்து முதல் முழுமையான பண்டைய எகிப்திய மரபணுவை வரிசைப் படுத்தி உள்ளனர்.
- இது இன்று வரை எகிப்திலிருந்து பெறப்பட்ட பழமையான டிஎன்ஏ மாதிரியாகும்.

- இந்த உடல் சுமார் 4,500 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தின் பழையப் பேரரசின் போது உயிரிழந்த ஓர் இளம் ஆணினுடையதாகும்.
- அவரது டிஎன்ஏவில் சுமார் 22% ஆனது மெசபடோமியாவைச் சேர்ந்த (இன்றைய ஈராக், மேற்கு ஈரான், தெற்கு சிரியா, தென்கிழக்கு துருக்கி) ஆரம்பகால விவசாயிகளுடன் அதிகளவில் பொருந்துகிறது.
- முன்னதாக, இந்தத் திருத்தப்பட்ட கி.மு. 787 முதல் திருத்தப்பட்ட கி.பி. 23 வரையிலான பிற்கால காலங்களிலிருந்து மூன்று பண்டைய எகிப்திய மரபணு தரவுத் தொகுப்புகள் மட்டுமே கிடைத்தன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★